மேலே மலைக்கிழங்குகளை கெள்ளி சாப்பிட்டுவிட்டுப் போகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு உடனே அந்த சத்துணவுக் கூடத்தை திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயல்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். : சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடம் குழந்தை களுக்காக ஆரம்பிக்கவேண்டுமென்று சொல்கின்றபோது, அங்கே 70-லிருந்து 150 குழந்தைகள் வரையில் இருக்க வேண்டும். சத் துணவுக் கூடம் புதியதாக வேண்டுமென்று வருகிறபோது அந்த குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதை ஆய்வு செய்து, அங்கே எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்பதை அறிவித்த பிறகு அத்தகைய சத்துணவுக் கூடங்கள் தொடங்கப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள் விக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து எந்தவித மான அறிக்கையும் வரப்பெறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர்கள் கழக பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ்

75—*(வினா எண் 13413)— திரு. சைதை சா. துரைசாமி மாண்புமிகு திரு. வே. சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : திரு. கே. உசசி மற்றும் திரு. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

உடல் ஊனமுற்றவர்கள் தமிழ்நாடு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பாஸ் வழங்கும் செய் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தமிழ்நாட்டிலுள்ள கண் பார்வையற்றவர்கள், வயது வரம் பின்றி, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளிலும் சிகிச்சை பெற மருத்துவ மனைக்கும், பள்ளிக்கும் பிற பயணங்கள் மேற் கொள்வதற்கும் இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகின்றது.

1987 நவம்பர் 12]

2. உடல் ஊனமுற்ற குழந்தைகள் (அதாவது உடல் ஊனம் 50 விழுக்காடுகளுக்கும் கூடுதலாயிருந்தால்) தமது இருப்பிடத்திலிருந்து பள்ளிக்கு அல்லது சிகிச்சை பெற மருத்துவமனைக்கு சென்று வர இலவசப் பயணச் சலுகை வழங்கப்படுகின்றது. மேற்படி குழந்தைகள் கல்வி பயிலும் நிறுவனம் அல்லது மருத்துவ அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற்று இச்சலுகையை பெறலாம்.

3. உடல் ஊனமுற்றவர்கள் தமது இருப்பிடத்திலிருந்து கல்லூரி/பயிற்சி நிறுவனங்கள் மற்றும் இருப்பிடத்திலிருந்து, வேலை செய்யும் நிறுவனம்/தொழிற்பட்டறைக்கு சென்று வர சாதாரண மாணவ மாணவியர்க்கு வழங்கும் சலுகைப் பயணச் சீட்டில் 50 சத விகிதம் சலுகை வழங்கும் செயற்குறிப்பு சமூக நல இயக்குநனரிடமிருந்து தற்போது பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கைதை ந. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல முழுமையாக கண்பார்வை அற்றவர்களுக்கு முழு சலுகையும், 50 சதவிகித விழுக்காட்டுக்கு மேலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு, குழந்தைகளுக்கு சலுகையும், உடல் ஊனமுற்றவர்களுக்கு 50 சதவிகிதம் வழங்கப்படுகின்ற கொள்கை குறிப்பும் அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்த 50 சதவிகிதம் சலுகையையும் முழுக்க 100 சதவிதமாக மாற்றி விரைவில் இலவச பாஸ் வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து போக்குவரத்துத் துறையோடு கலந்து பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

அநாதை விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகப்படுத்தல்.

76—*(வினா எண் 14093)—திரு.கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு சத்துணவு சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனாதை விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகையினை அதிகப்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) அந்தந்த மாதத்து உதவித்தொகை அநாதை இல்லங்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டு வருகிறதா ?